# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.

தொலைபேசி: 044-22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

**முறையீட்டு மனு எண்: 0008/2017/TPT**

**ஆணை எண்: 118/2017**

**நாள்: 20/05/2017**

திரு. R. செல்வகணபதி
11, கீழத் தெரு, உடன்குடி,
தூத்துக்குடி மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

1. திரு. M. மஹீன் அபு பக்கர்,
   பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்,
   திருநெல்வேலி.

2. திரு. வைத்தியநாதன்,
   செயல் அலுவலர், உடன்குடி பேரூராட்சி,
   உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம் - 628 203.

3. திரு. A. மணி,
   செயல் அலுவலர் (ஓய்வு)
   31, அம்பை வீதி, கருகுறிச்சி – 627 417. — எதிர் மனுதாரர்கள்

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, கதவிலக்கம் 11, கீழத் தெருவில் உள்ள திரு. R. செல்வகணபதி என்பவரது 10.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.01.2017 அன்று பெறப்பட்டு 0008/2017 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பேரூராட்சி கிழக்குத் தெரு, 11 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. R. செல்வகணபதி அவர்கள் உடன்குடி பேரூராட்சி கீழத்தெரு கதவு எண்:11 உள்ள வீட்டின் உரிமையாளர்கள் என சட்ட விரோதமாக சேர்த்த நபர்களின் பெயர்களை (வழக்கு எண்.136/11-ல் குறிப்பிடப்பட்டுள்ள எதிர் மனுதாரர்கள்) நீக்கவும், பொறுப்புடன் செயல்படாத பேரூராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளார். மேலும், பேரூராட்சி அலுவலர்களின் ஊதியத்திலிருந்து ஒரு தொகையை பிடித்தம் செய்து தனக்கு ஏற்பட்ட இழப்பினை சரிகட்டவும் கோரியுள்ளார்.

2. மேற்குறிப்பிட்ட புகார் சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை பெறப்பட்டது. உடன்குடி பேரூராட்சி கிழத்தெரு கதவு எண்.11ல் உள்ள வீடு மனுதாரரின் தாயார் சுப்பம்மாளுக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டது என்றும், அவரது மறைவுக்குப்பின் மேற்படி முகவரியில் உள்ள வீடு ஆண் வாரிசுதாரர்களான மனுதாரர் மற்றும் அவரது மூத்த சகோதரர் திரு. R. முத்துக்குமாரசுவாமி ஆகிய இருவருக்கும் பாத்தியப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். திருமதி. R. சுப்பம்மாள் அவர்களின் மறைவுக்குப்பின், அவரது மூத்த மகனும் மனுதாரரின் மூத்த சகோதரருமான திரு. முத்துக்குமாரசுவாமி மேற்படி வீட்டினை தன் பெயரிலும் தன் சகோதரர் மனுதாரரின் பெயரிலும் பெயர் மாற்றம் செய்யக் கோரி 8.12.2009 அன்று மனு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட மனுவினை ஏற்ற அன்றைய செயல் அலுவலர் 28.01.2010 நாளிட்ட பெயர் மாற்ற எண்.195/2010ல் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார் மேற்படி வீட்டிற்கு பெயர் மாற்றம் செய்ததை தொடர்ந்து திரு. R. முத்துக் குமாரசுவாமி தனது பங்கில் ஒரு பகுதியினை தனது மனைவி திருமதி சுயற்கண்ணிக்கு கிரயம் செய்து கொடுத்தும் அதன் மூலம் திருமதி சுயற்கண்ணி திருமதி. நேசமணி அம்மாள் அவர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும், செயற் அலுவலர் தெரிவித்துள்ளார். மற்றொரு பகுதியை திருமதி. M. மாரியம்மாள் என்பவருக்கு திரு. R. முத்துக்குமார சுவாமி கிரயம் செய்து கொடுத்துள்ளார். திரு. R. முத்துக்குமாரசுவாமியின் பாகத்தை கிரயம் பெற்ற திருமதி. நேசமணி மற்றும் M. மாரியம்மாள் ஆகிய இருவர்களும் கட்டிட அனுமதி பெற்று கட்டிடம் கட்டியுள்ளனர். மேற்படி கட்டிடங்களுக்கு பேரூராட்சியால் சொத்து வரியும் வதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. முறையீட்டு மனுதாரரிடம் 27.4.2017 அன்று விசாரணை நடைபெற்று வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. விசாரணையின் போது மனுதாரர் தனது சகோதரி திருமதி. நங்கையார்அவர்கள், திருச்செந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அவரைத்தவிர வேறு யாரும், மேற்குறிப்பிட்ட வீட்டில் உரிமை கோர இயலாது என உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றும் அத்தீர்ப்பினைத் தெரிவித்து எதிர்மனுதாரரான திரு. முத்துக்குமார சுவாமி மற்றும் மூவர் மேல்முறையீடு எதும் செய்யவில்லை என தெரிவித்தார். மேலும், தனது சகோதரர் பெயருக்கு 2009-ஆம் ஆண்டில், வரிவிதிப்பு செய்ததின் அடிப்படையிலேயே மூன்று கிரயங்கள் செய்யப்பட்டு கிரயம் பெற்றவர்கள் தங்கள் பெயரில் சொத்துவரி மாற்றம் செய்து கொண்டனர் என்றும் தெரிவித்துள்ளார். கிரயம் பெற்றவர்கள் சொத்துவரி மாற்றம் செய்ததை எதிர்த்து தான் உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் 13201/2011 எண்ணிட்ட நீதிப் பேராணையில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், விசாரணையின்போது தெரிவித்தார். அவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்.

4. உடன்குடி பேரூராட்சி கிழத்தெருவில் உள்ள 11, எண்ணிட்ட வீடு திருமதி. R. சுப்பம்மாள் என்பவருக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டிருந்தது. திருமதி சுப்பம்மாள் அவர்கள் 16.07.2005ல் காலமாகிவிடவே, அந்த உயிலில் குறிப்பிட்டபடி சுப்பம்மாளின் ஆண் வாரிசுதாரருக்கு உரிமையுடையதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமதி. சுப்பம்மாள் 16.7.2005ல் காலமான பின்பு, அவரது மூத்த மகனும் மனுதாரரின் சகோதரருமான முத்துக்குமார சுவாமி 12.2.2007 நாளிட்ட கடிதத்தில் தன் பெயரிலும் , தன் சகோதரர் பெயரிலும் கூட்டாக பெயர் மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளார். இதற்கு மனுதாரர் எதிர்ப்பு தெரிவித்ததன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட வீட்டின் பெயர் மாற்றம் சம்பந்தமாக இருவரும் நீதிமன்றத்தை அணுகி நீதிமன்றத் தீர்ப்பினை பெற்று முறையீடு செய்து கொள்ளுமாறு 13.4.2007 நாளிட்ட குறிப்பாணையில் திரு. முத்துக்குமாரசுவாமிக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது. இதற்குப்பின் 3 ஆண்டுகள் கழித்து மேற்படி வீட்டிற்கான சொத்துவரி திரு. முத்துக்குமாரசாமி மற்றும் அவரது சகோதரரும் மனுதாரருமான செல்வகணபதி பெயரில் 2010 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது சொத்துவரிக்கான பெயர் மாற்றம் செய்தபின் திரு. முத்துக்குமார சுவாமி தனது பங்கினை தனது மனைவி மற்றும் திருமதி M. மாரியம்மாள் ஆகியோருக்கு கிரயம் செய்து கொடுத்த நிலையில்

கிரயம் பெற்றவர்கள் கட்டிட அனுமதி பெற்று வீடு கட்டியதுடன் சொத்து வரியும் தங்கள் பெயரில் செலுத்தியுள்ளனர். இந்நிகழ்வுகள் அனைத்தும் 2010 ஆம் ஆண்டிற்குள்ளேயே நிறைவு பெற்றுவிட்டன. முறையீட்டு மனுதாரர் 5 ஆண்டுகள் கழித்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளார். 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 10 (3) (c) ல் குறிப்பிட்டுள்ளபடி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் விசாரணை மேற்கொள்ள இயலாது. மேலும், மனுதாரர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்துள்ள வழக்கும் நிலுவையில் உள்ளது. மேலும் மனுதாரர் சமர்ப்பித்த ஆவண நகல் திருச்செந்தூர் கோட்டாட்சியர் செயல்முறை அ1.891/13, நாள் 14.02.2017–ல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி பொருட்பாடு குறித்து தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்திலும் 112/2005 வழக்கு நிலுவையில் உள்ளதென தெரியவருகிறது. மேற்குறிப்பிட்ட சட்டப் பிரிவு 10 (3) (b)ல் குறிப்பிட்டுள்ளபடி நீதிமன்றம் ஒன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத் தலைவர் விசாரிக்க இயலாது. மேலே கூறப்பட்ட சூழ்நிலையில் முறையீடு சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க உட்படுத்த இயலாது எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. R. செல்வகணபதி
   11, கீழத் தெரு, உடன்குடி,
   தூத்துக்குடி மாவட்டம்.

2. திரு. M. மஹீன் அபு பக்கர்,
   பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்,
   திருநெல்வேலி.

3. திரு. வைத்தியநாதன்,
   செயல் அலுவலர், உடன்குடி பேரூராட்சி,
   உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம் - 628 203.

4. திரு. A. மணி,
   செயல் அலுவலர் (ஓய்வு)
   31, அம்பை வீதி, கருகுறிச்சி – 627 417.